வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 54 / 2020

வழக்கு சாட்சி - PW -1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியம்மாள் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | திருமூர்த்தி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.08.2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை :** **நாள் : 04.08.2025.**

1) நான் பல்லடம் மாணிக்கபுரம் ரோட்டி சிவசக்தி நகரில் குடியிருந்து வருகிறேன். மாணிக்கபுரம் ரோட்டில் உள்ள வைரம் நகரில் எனது உறவினர் வீட்டிற்கு ஈமசடங்கிற்காக செல்லவேண்டி நானும் என் கணவரும் சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வீட்டிற்கு புறப்பட்டு சென்றோம். வைரம் நகர் சென்று கனபதி சைசிங் பக்கத்தில் சென்ற போது என் கணவரை அங்கேயே நிற்கசொல்லிவிட்டு நான் ரோட்டின் மேல்புறம் உள்ள மளிகை கடைக்கு சென்று அங்கு நின்று கொண்டிருந்தேன். அ'போது மதியம் 3.00 மணி இருக்கும். மாணிக்கபுரம் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக வந்த ஒரு பைக்கு அதிவேகமாக வந்து என் கணவர் மீது மோதியது அதில் என் கணவர் தூக்கி வீசப்பட்டால் உடனே நானும் பக்கத்தில் இருந்தவரும் போய்பார்த்தோம். எனது கணவருக்கு வலது கால் துண்டாகிவிட்டாது தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் ஆம்புலென்ஸ் மூலமாக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு முதல் அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்து. மேல் சிகிச்சைகாக கோவை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு சிகிச்சை அளித்தோம் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பல்லத்தில்

சிகிச்சையில் இருக்கும்போது பல்லடம் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரத்தை புகார் வாக்குமூலமாக கொடுத்தேன்.

2. அந்த புகார் வாக்குமூலத்தில் நான் கைரேகை வைத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை எண்ணுடையது தான் அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1.** ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். எனது கணவர் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரனை செய்தார்கள். உடன் இருந்தும் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரனை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் மளிகை கடைக்கு சாமன்கள் வாங்குவதற்கு போன கடை பெயர் என்ன என்றால் விஞாயகம் ஸ்டோர். மேற்படி கடையானது தென்வடல் ரோட்டின் மேல்புறத்தில் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. நாங்கள் எங்கு சென்றோம் என்றால் மாணிக்காபுரம் சிவசக்தி நகரில் ஜோசியக்காரர் வீட்டிற்கு துக்கம் விசாரிக்க போயிந்தோம். அவர் எங்களுக்கு உறவினறா என்றால் இல்லை பழக்கம். எங்கள் வீட்டில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் தூரம் பற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக புகாரை எங்கு சென்று கொடுத்தோம் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தோம். காவல் நிலையத்திற்கு நானும் எனது மகன் செல்வராஜும் சென்றோம். அப்போது என்ன நேரம் இருக்கும் என்றால் தெரியாது.

2. நான் ரேகை வைத்த தாள் யாரால் எழுதப்பட்டது அதில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் பின்னிட்டு நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. புகாருக்கு பின்னிட்டு காவல் துறையினர் என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றால் ஒரு வருடம் கழித்து என் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். இழப்பீடு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நிலுவையில் உள்ளது. எனக்க கல்வி அறிவு இருக்காததால் விபத்து ஏற்படுத்திய வாகனம்

பற்றி பதிவெண் அது என்ன வகையான வாகனம் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. நான் சாமான்கள் வாங்க கடைக்கு சென்ற போது சத்தம் கேட்டுதான் பார்த்தேன் என்றால் நான் சாமான் வாங்கிகொண்டு மேல்புறம் ரோட்டை தாண்டி சென்ற போது சத்தம் கேட்டது அப்போது பார்த்தேன்.

3. காவல்நிலையத்திலும் இதே விபரம் பற்றி தான் சொன்னேன் என்றால் சரிதான். எனது கணவர் தான் வயதான காலத்தில் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் குறுக்கே கடந்த விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெற வேண்டி எதிரியின் மீது தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.08.04 19:33:10 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

 04.08.2025.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 54 / 2020

வழக்கு சாட்சி - PW -2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | திருமூர்த்தி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.08.2025.

(எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :** **நாள் : 04.08.2025.**

1) நான் பல்லடம் மாணிக்கபுரம் ரோட்டி சிவசக்தி நகரில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன திருமூர்த்தி எனது அப்பா ஆவார். அ.சா.1 எனது அம்மா ஆவார். கடந்த 30.04.20219 ம் தேதி எனது அப்பா, அம்மா இருவரும் மாணிக்கபுரம் ரோட்டில் வைரம் நகரில் உள்ள எனது உறவினர் இறப்பிற்காக சென்றார்கள். அப்போது கணபதி சைசிங் மில் அருகே எனது அப்பா, அம்மா இருவரும் சென்றபோது எனது அம்மா எனது அப்பாவை அங்கேயே நிற்க சொல்லிவிட்டு மளிகை சாமான்கள் வாங்க மேல்புறம் உள்ள கடைக்க சென்று மளிகை கடைமுனபு நின்று கொண்டிருந்தார்கள். அப்போது வடக்கில் இருந்து தெற்க நோக்கி வந்த Splendor இருசக்கர வாகனம் எனது அப்பாவின் மீது மோதி கை,கால், தலை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டதாகவும், எனது அப்பாவின் கால் அந்த இடத்திலேயே துண்டாகிவிட்டது. என்று என் அம்மா சொன்னார் அவரை ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லவதாக சொன்னார் நான் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சென்று எங்க அப்பாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்தோம். அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி அங்கேயே இறந்துவிட்டார். எங்க அப்பாவின் பிரேதத்திமீது போலீசார் பிரேத விசாரனை செய்தார்கள். உடனிருந்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு விபத்தை பற்றி யார் தகவல் சொன்னார்கள் என்றால் எனது அம்மா போன் மூலம் தகவல் சொன்னார். நான் சென்று தான் அடிப்பட்ட அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் ஏற்கனவே அழைத்து சென்றார்கள். நான் சம்பவத்திற்கு பின்னிட்டு அம்மாவை அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. காவல் துறையில் இருந்து அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். மாலை 3.30 மணிக்கு வந்தார்கள். யாரிடம் விசாரித்தார்கள் என்றால் என் அம்மாவிடம் விசாரித்தார்கள் என்னிடம் விசாரிக்கவில்லை. அன்று என்னை கோவை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அன்றே என் அம்மாவிடம் கோவை அரசு மருத்துவனையில் வைத்தே கைரேகை வாங்கினார்கள்.

2. பல்லடம் அரசு மருத்துவமனையில் வைத்து என் அம்மாவிடம் கைரேகை வாங்கினார்களா என்றால் இல்லை கோவை அரசு மருத்துவமனையில் வைத்து வாங்கினார்கள். இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா தான் கவனக்கறைவாக ரோட்டை கடந்து விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.08.04 19:33:20 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.